# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | நாடகமும் அரங்கியலும் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

மேலதிக வாசிப்பு நேரம்:10 நிமிடங்கள்

### பகுதி - I

❖ பொருத்தமான விடையை தெரிவு செய்து எழுதுக.

01. நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு தூண்டல் எனும் கூற்றினை முன்வைத்தார்
(1) பரதர் (2) பேர்ணாட்ஷா (3) இளம்பூரனார் ‘
(4) அபிநவகுப்தர் (5) அரிஸ்ரோட்டில் (...........)

02. நாடகத்தின் ஜீவனாக அமைவது
(1) கதை (2) முரண் (3) கதைப்பின்னல்
(4) பாத்திரங்கள் (5) அரங்கவெளி (...........)

03. சேக்ஸ்பியர், இப்சன் ஆகியோரின் நாடகங்களை எவ்வாறு அழைப்பர்
(1) ஆற்றுகை (2) வெற்றுக்கவிதை (3) பிளே
(4) உபபாடம் (5) நன்கமைக்கப்பட்ட நாடகம் (...........)

04. ஆற்றுகைக் கலைகளுள் ஒன்று,
(1) இலக்கியம் (2) சிற்பம் (3) ஓவியம்
(4) நாடகம் (5) கட்டடக் கலை (...........)

05. நாடக எழுத்துருவாக்கத்தில் முக்கியம் பெறும் விடயம்
(1) நடிப்பு (2) பாத்திங்கள் (3) கதை
(கரு) (5) கதைப்பின்னல்

06. கவிதை நாடகங்களை எழுதியோர்.
(1) பேரா மௌனகுரு, முருகையன்
(2) அம்பி, கலாநிதி. சிதம்பரநாதன்
(3) மகாகவி உருத்திரமூர்த்தி, முருகையன்
(4) பேரா.வித்தியானந்தன், மௌனகுரு
(5) பேரா.கா. சிவத்தம்பி, கரை - செ. சுந்தரம்பிள்ளை (...........)

07. நாடக தயாரிப்பிற்கு தேவையான நிதி தொடர்பான அனைத்து செலவுகளுக்கும் பொறுப்பாக இருப்பவர்
(1) நெறியாளர் (2) நடிகன் (3) தயாரிப்பாளர்
(4) அரங்க முகாமையாளர் (5) நாடக ஆசிரியர் (...........)

08. மலையகத்தில் ஆற்றப்பெறும் சடங்ககளில் ஒன்றாக கொள்ளப்படுவது
(1) சூரன்போர் (2) பாண்டவர் வனவாசம் (3) வேடுவசடங்கு
(4) வேலன் வெறியாட்டு (5) காட்டேறி திருவிழா (...........)



kalvi.lk

09. அரங்கியல் எனும் நூலை எழுதியவர்
(1) பேரா. சி. மௌனகுரு (2) காரை. செ. சுந்தரம்பிள்ளை (3) கார்த்திகேசு சிவத்தம்பி
(4)பேரா. கா. சிவத்தம்பி (5) க. திலகநாதன் (...........)

10. கல்முனையில் நிகழ்த்தப்படும் சடங்கு அரங்காக கருதப்படுவது
(1) பாண்டவர் வனவாசம் (2) மகிடிக் கூத்து (3)காமன்கூத்து
(4) அர்ச்சுணன் தபசு (5) பொன்னர் சங்கர் (...........)

11. கிரேக்கத்தின் எச் சடங்கில் இருந்து நிரயடி தோற்றம் பெற்றது?
(1) குறி சொல்லும் சடங்கு (2) டயோனிசியஸ் சடங்கு (3) கோமஸ் சடங்கு
(4) அப்பலோவின் வழிபாட்டு சடங்கு (5) லேயசின் வழிபாட்டு சடங்கு (...........)

12. கிரேக்கத்தில் கருவளத்தின் களவுனாகக் கொள்ளப்படுபவர்
(1) அப்பல்லோ (2) இஸ்மெனஸ் (3) மொனொசியன்
(4) டயோனிசியஸ் (5) பொலிப்பஸ் (...........)

13. தெஸ்பிசின் வண்டி என்ற கலைச் சொல் குறிப்பது
(1) அரங்க வெளிப்பாட்டினை (2) அரங்கின் சிந்தனைகள் (3) அரங்க தொடர்பாடல்
(4) அரங்கப் பண்பாடு (5) அரங்க வரலாறு (...........)

14. சோயோகிளிஸ் காலத்தில் ஈடிப்பஸ் நாடகத்தில் நடித்த நடிகர்களின் எண்ணிக்கை
(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6 (...........)

15. கோவலன் கூத்து பிரதானமான மோடி
(1) வடமோடி (2) தென்மோடி (3) முல்லை மோடி
(4) வடபாங்கு (5) தென்பாங்கு (...........)

16. அவலச் சுவை நாடக கட்டமைப்பில் கோரஸ் முதன்முதலில் ஆடுகளத்தில் பிரவேசிப்பது
(1) பாயிரம் (2) எபிசோடியா (3) பரடொஸ்
(4) ரெசிமா (5) செய்தியாளன் (...........)

17. பிரபுக்களையும் அரசர்களையும் மகிழ்விப்பதற்காக சிலப்பதிகார காலத்தில் நடனமாடிய மாது
(1) மாதவி (2) மாதரி (3) ஐயை
(4) தோரிய மடந்தையர் (5) விரலி (...........)

18. உடுக்கடி கதை எந்தக் கூத்தில் இடம்பெறுகின்றது?
(1) இராவணேசன் (2) சத்தியவான் சாவித்திரி (3) காத்தவராயன் கூத்து
(4) ஞான சவுந்தரி (5) இராம நாடகம் (...........)

19. கலையினைக் குறிக்கும் Arts எனும் சொல்லின் மூலச்சொல் உருவாகிய மொழி
(1) கிரேக்க மொழி (2) ஆங்கில மொழி (3) யப்பானிய மொழி
(4) சீன மொழி (5) பிரெஞ்சு மொழி (...........)

20. கலையில் பிரதானமாக வெளிப்படுவன
(1) உருவம் (2) உணவு (3) பிரச்சாரம்
(4) விழுமியம் (5) பண்பாடு (...........)

21. இசை நாடகங்களைப் பயிற்றுவிப்பவர்
(1) சாம்பவாண்டிமார் (2) மூப்பன் (3) நெறியாளர்
(4) மகாமுனி (5) அண்ணாவியார் (...........)



kalvi.lk

22. 16ம் நூற்றாண்டில் தோன்றிய மேலைத்தேய ஆடல் வடிவம்
(1) புகாகு (2) ஒபேறா (3) ஊமம்
(4) பலே (5) வயாங்குலிற் (..........)

23. அரங்கின் தொன்மையை அறிய உதவும் பிரதேசம்
(1) அற்றிகா (2) எதென்ஸ் (3) ஸ்பாட்டா
(4) மேகரா (5) சைப்பிரஸ் (..........)

24. சின்னமணி எனும் கலைஞரினால் அதிகம் ஆற்றுகை செய்யப்பட்ட கலை வடிவம்
(1) கதாப்பிரசங்கம் (2) வில்லுப்பாட்டு (3) கூத்து
(4) யதார்த்த நாடகம் (5) பாட்டுக் கச்சேரி (..........)

25. தொழிநுட்ப கலையாக அமைவது
(1)வானொலி நாடகம் (2) மேடை நாடகம் (3) தெருவெளி நாடகம்
(4) கூத்து (5) இசைநாடகம் (..........)

26. உயிரோட்டமான வடிவமாக அமையாதது
(1) இசைநாடகம் (2) தொலைக்காட்சி நாடகம் (3) கூத்து
(4) யதார்த்த நாடகம் (5) அபத்த நாடகம் (..........)

27. நாடகத்தில் பயன்படும் காண்பியங்களுள் உள்ளடக்கப்படாதது
(1) ஒளி (2) வேட உடை (3) ஒப்பனை
(4) காட்சி அமைப்பு (5) ஒலி (..........)

28. நாடகத்தின் சூழமைவு நிகழும் களத்தினை தெளிவாக வெளிப்படுத்துவது
(1) வேட உடை (2) இசை (3) ஒளி
(4) ஒப்பனை (5) காட்சி அமைப்பு (..........)

29. கவித்தொகையுடன் தொடர்புபடாதது
(1) கவிப்பா (2) உறழ்கவி (3) கொச்சகம்
(4) விருத்தம் (5) கலி வெண்பாட்டு (..........)

30. சிலப்பதிகாரத்தில் மாதவியின் ஆற்றுகை பற்றி குறிப்பிடப்படும் பகுதி
(1) அரங்கேற்றுகாதை (2) கடலாடு காதை (3) காடுகாண் காதை
(4) ஊர் காண் காதை (5) அடைக்கல காதை (..........)

31. மகேந்திர வர்மன் எழுதிய நாடகம்
(1) அவிமாரகம் (2) இரத்தினாவளி (3) விக்கிரமோர் வசீயம்
(4) மாளவிகா அக்னி மித்ரம் (5) மத்த விலாச பிரகரனம் (..........)

32. சிங்கன், சிங்கி பாத்திரங்கள் தோன்றும் நாடகவகை
(1) பள்ளு (2) குறவஞ்சி (3) நொண்டி
(4) கீர்த்தனை நாடகம் (5) மகாநாடகம் (..........)

33. தமிழ் நாட்டின் சிறுவர் அரங்க செயற்பாட்டில் ஈடுபட்டவர்
(1) வேலு சரவணன் (2) பிரளயன் (3) ராயு
(4) ராமசாமி (5) வெளிறங்கநாதன் (..........)

34. நாடக பிரதியை முதலில் ஆக்கியவர்
(1) அரிஸ்ரோட்டில் (2) ஏரியன் (3) தெஸ்பிஸ்
(4) ஈஸ்கலஸ் (5) சோபோகிளிஸ் (..........)



kalvi.lk

35. கிரேக்கத்தில் நாடகங்கள் ஆற்றுகை செய்த காலப்பகுதி

(1) காலை (2) நண்பகல் (3) மாலை

(4) பகல் (5) இரவு (...........)

- **பின்வரும் படங்களை அவதானித்து பொருத்தமான விடையை தருக.**



A



B



C



D



E

36. தப்பி வந்த தாடி ஆடு நாடகத்தினை ஆக்கியவர்

(1) A (2) B (3) C (4) D (5) E (...........)

37. கூத்தினை நவீன மயப்படுத்தியவர்

(1) B (2) A (3) D (4) C (5) E (...........)

38. கட்டிறுக்கம் வாய்ந்த நாடகங்களை ஆக்கியவர்

(1) C (2) A (3) B (4) D (5) E (...........)

39. கோடை நாடகத்தை ஆக்கியவர்

(1) E (2) A (3) C (4) D (5) B (...........)

40. ஆரொடுநோகேன் என்னும் நாடகத்தினை எழுதியவர்

(1) B (2) A (3) C (4) D (5) E (...........)



kalvi.lk

## பகுதி - II

❖ **A பிரிவில் இருந்து இரண்டு வினாக்களையும் B பிரிவில் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### பிரிவு A

01. (i) ஆற்றுகை கலை என்றால் என்ன?
    (ii) நாடகம் கலையின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக?
    (iii) நாடகம் ஏனைய ஆற்றுகைக் கலைகளில் இருந்து வேறுபட்டிருப்பதை விளக்குக?
    (3+ 5+ 7 =15 புள்ளிகள்)

02. (i) கலைபற்றிய கொனிக்மனின் கூற்று யாது?
    (ii) மேலைத்தேய கலைக்கோட்பாட்டாளர்களை குறிப்பிட்டு அவர்களில் இருவரின் கூற்றுக்களை குறிப்பிடுக?
    (iii) கலைகளின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றினை உதாரணங்களுடன் விளக்குக?
    (3+ 6+ 6 =15 புள்ளிகள்)

03. (i) சடங்கு என்றால் என்ன?
    (ii) நீர் வாழும் சமூகத்தில் ஆற்றப்பெறும் சடங்கொன்றின் ஆற்றுகை முறையினை தருக?
    (iii) சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையிலான ஒற்றுமைப் பண்புகளை விளக்குக?
    (3+ 6+ 6 =15 புள்ளிகள்)

04. கிரேக்க திறஜெடி நாடக வளர்ச்சியில் ஈஸ்கிலஸ் சோ.ஃ.போக்கிளிஸ் யுரிபிடிஸ் ஆகியோரது அரங்கப் பணிகளை விபரிக்குக?
    (15 புள்ளிகள்)

05. (i) ஈடிபஸ் மன்னன் நாடக பாடத்தின் ஆசிரியர் யார்?
    (ii) ஈடிபஸ் மன்னன் நாடக பாடத்தில் வருகின்ற பாத்திரங்களை குறிப்பிடுக?
    (iii) ஈடிபஸ் மன்னன் நாடக பாடத்தில் மோதுகை பயன்படுத்தப்படும் முறையினை விளக்குக?
    ( 3+ 6+ 6 =15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்வில் விரும்பிய மூன்றிற்கு சிறுகுறிப்பு வரைக?
    (i) பலே  (ii) ஏபெரா  (iii) வேலன் வெளியாட்டு
    (iv) ஊமச்சித்திரிப்பு  (v) நாடக எழுத்துரு
    (5 x 3 =15 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page